# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.54/2022

## அ.சா.2 (LW2)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கோபிஆனந்த்** | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | **குருசாமி** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **10.02.2023** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குமாலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன கருப்பையாவை தெரியும். சாட்சி கங்காதரனை (அசா.1) தெரியும். எதிரிகளை தெரியும். 14.06.2021 ம் வருடம் மாலை 4.30 மணியிருக்கும் ஏற்போர்ட் நகரிலிருந்து மாலைபட்டி செல்வதற்காக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி என்னுடைய TN 57 W6791 என்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றேன். மாலைப்பட்டி பிரிவு அருகில் ஆட்டோவில் சென்று கொண்டுயிருக்கும் பொழுது கங்காதரன் என்னுடைய வண்டியை மறித்தார். நான் ஆட்டோவை நிறுத்தி பார்த்தேன். கருப்பையா கத்தி குத்துப்பட்டு கீழே கிடந்தார். என்ன என்று கங்காதரனை கேட்டேன். அதற்கு கங்காதரன் கருப்பையாவை சிரஞ்சீவி கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார். நான் பார்த்த பொழுது சிரஞ்சீவி கத்தியுடன் இருந்தார். 2 மற்றும் 3 எதிரிகளும் சிரஞ்சீவி அருகில் நின்றுகொண்டு இருந்தார்கள். கங்காதரனுக்கு முதுகில் காயத்துடன் இருந்தார். அவரது சட்டை முழுவதும் இரத்தமாக இருந்தது. ஆட்டோவில் கருப்பையா மற்றும் கங்காதரனை ஏற்றிக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்ன நடந்தது என்று கங்காதரனை கேட்டப் பொழுது காலையில் ஒயின்ஸ்ஷாப் அருகில் பண பிரச்சனை வந்தது எனவும், அதனால் சிரஞ்சீவிக்கும் கருப்பையாவுக்கும் சண்டை வந்தது எனவும், அந்த சண்டையின் தொடர்ச்சியாக சிரஞ்சீவியின் தலையில் கருப்பையா அடித்து சிரஞ்சீவிக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக எதிரிகள் மூவரும் ஒன்று சேர்ந்து தங்களை தாக்கியதாகவும், சிரஞ்சீவி, கருப்பையாவை கத்தியால் குத்தியதாகவும், கங்காதரன் என்னிடம் சொன்னார். கருப்பையா இறந்துவிட்டார்.

**சம்பவம் சம்மந்தமாக கங்காதரன் புகார் கொடுத்தார். போலீஸ்சார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.11 14:05:30 +0530

Additional District Judge,

Dindigul.